**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 05 ம் நாள்

E.P.No.13/2020

in

ACP.No.156/2015

ஸ்ரீராம்சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட்,

மன்னார்குடி, அதற்காக அதன் முன்பன் சுபாஷ்.

..... மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர்

// **எதிர்**//

1. கணேசன்

2. சங்கீதா

3. பாலமுருகன்

4. லதா

5. ரவிச்சந்திரன் ..... எதிர்மனுதாரர்கள்/ தீர்ப்பு கடனாளிகள்

தலைமை ஆசிரியர்,

அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,

திருத்துறைப்பூண்டி ..... 3 ம் எதிர்மனுதாரரின் கார்னிஷி

தலைமை ஆசிரியர்,

அரசு உயர்நிலைப்பள்ளி,

கட்டிமேடு - 614716

திருவாரூர் மாவட்டம். ..... 4 ம் எதிர்மனுதாரரின் கார்னிஷி

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் வருகையில்லாததால்

ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை நிலுவையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## உத்தரவு

இம்மனுவானது 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டிய தொகைக்காக அவர்களது மாத சம்பளத்தில் பிடித்தம் செய்யும் பொருட்டு, சிபிசி கட்டளை 21 விதி 11-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

இம்மனு 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்களுக்கு சி.பி.சி. ஆர்டர் 21 ரூல் 48 ன்படி அறிவிப்பு விட்டு கேட்டும், அதன்படி நோட்டீஸைப் பெற்றுக்கொண்டு கூடுதல் தொகை ரூ.1,91,738/-பின் வட்டி, நிறைவேற்றுகிற செலவுகளுடன் 2 மற்றும் 9 காலங்களில் கண்ட 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகளிடம் இருந்து வசூல் ஆகும் பொருட்டு மேற்படி 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி நோட்டீஸை பெற்றுக் கொண்டு தொகை செலுத்தாவிடில் 3 ம் எதிர்மனுதாரர், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டத்தில் உடற்கல்வி இயக்குநராக பணிபுரிந்து பெறும் மாத ஊதியம் ரூ.23,422/-ல் பிரிவு 60 ன்படி பிடித்தம் செய்யப்படக்கூடாத தொகை ரூ.1000/-ஐ கழித்து மீதத் தொகையான ரூ.22,422/-ல் 3ல் 1 விகித தொகை ரூ.7,474/-க்கு சம்பள ஜப்தி உத்தரவு பிறப்பித்து அதற்கான புரோ ஆர்டரை 3வது எதிர்மனுதாரரின் கார்னிஷியான தலைமை ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி வைத்தும், 4 ம் எதிர்மனுதாரர் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டிமேடு - 614 716, திருவாரூர் மாவட்டத்தில் இரண்டாம்நிலை ஆசிரியராக பணிபுரிந்து பெறும் மாத ஊதியம் ரூ.14,786/-ல் பிரிவு 60 ன்படி பிடித்தம் செய்யப்படக்கூடாத தொகை ரூ.1000/- ஐ கழித்து மீதத்

தொகையான ரூ.13,786/-ல் 3 ல் 1 விகித தொகை ரூ.4,595/-க்க சம்பள ஜப்தி உத்தரவு பிறப்பித்து அதற்கான புரோ ஆர்டரை 4 வது எதிர்மனுதாரரின் கார்னிஷியான தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, கட்டிமேடு - 614 716, திருவாரூர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி வைத்தும், 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்களின் சம்பள ஜப்தி தொகையை வரவு வைத்து வசூல் செய்து தர உத்தரவு பிறப்பிக்கக்கோரியும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் வருகையில்லாததால் இம்மனுவினைப்பொறுத்து ஒருதலைப்பட்ச மாக்கப்பட்டுள்ளனர்.

**4) இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

5) **தீர்வு** :-

1) மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதம் கேட்கப்பட்டது. மனு மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலனை செய்ததிலிருந்து 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி அவர்கள் தொகையினை செலுத்தி வைக்கவில்லை என்பதை அறிய முடிகிறது. எனவே, அவரது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்ய உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

2) மேலும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்து 3 ம் எதிர்மனுதாரரின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.7,400/- வீதம் 13 மாதங்களுக்கு ரூ.91,000/-பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.4,869/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்தும், 4 ம் எதிர்மனுதாரரின்

சம்பளத்திலிருந்து மாதம் ரூ.4,500/- வீதம் 21 மாதங்களுக்கு ரூ.94,500/-பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.1,369/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்து சம்பள ஜப்தி செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்வுக்காண்கிறது.

**6) முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. 3 ம் எதிர்மனுதாரரின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.7,400/- வீதம் 13 மாதங்களுக்கு ரூ.91,000/- பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.4,869/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்தும், 4 ம் எதிர்மனுதாரரின்சம்பளத்திலிருந்து மாதம் ரூ.4,500/- வீதம் 21 மாதங்களுக்கு ரூ.94,500/- பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.1,369/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்து சம்பள ஜப்தி செய்து உத்தரவிடுகிறது. For Pro order Batta call on 27.11.2024.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (22.10.2024 அவையறியப் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2024.10.23 17:49:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

<u>**விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**</u>

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2024.10.23 17:49:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.